12 noon. I believe, Sir, after you appoint these teachers, you must have what is called a refresher course once every three months, so that the teachers could go through these courses and become up to date in the matter of teaching experience and they could be good teachers and the students taught by them could become good pupils. I also believe that it will be a good thing if lady teachers are in charge of pupils up to the sixth standard. I believe that the education of children will be better then than what it is today. In the later stages men may be in charge of their education. In this connection, I wish to submit that co-education should come to a stop after the sixth standard or the seventh standard. Beyond that there should be no co-education. Of course, when I say this I may be regarded as a backward type of person. But with our experience at our back, we know what it is and we cannot but insist that there should be separate schools for boys and girls after the sixth or the seventh standard.

I am glad, Sir, attempts are now being made to teach English from the Fifth Standar. I am, however, afraid that the Government are deluding themselves into the belief that by doing this they can show to the world that they are also alive to the need for

24th March 1960] [Sri Abdul Hameed Khan]

the teaching of English in schools. While they want that English should be taught from the fifth standard, the irony of it is, they do not want English to be the medium of instruction in the university classes This is a thing which I am unable to understand. Why should you teach English in the lower classes and give it up at the college stage? If they don't want English in the college, why do you want English at all? Sir, this question of English in collegiate education is a sore question. I think I cannot do better than what my hon. Friends who spoke before me have said on it. However, I would like to say this. The two things that we have done in this country, one the premature introduction of adult franchise and the other our giving up of English language, have done the greatest mischief. The introduction of adult franchise was premature. Then, the English language is not my language, nor is it the language of any one of us here. But it is a language which has come to stay in this country. It has not only come to stay in this country but it is also the one language which is a common language for the whole of this country. There is no gainsaying it. There is no other language which can claim to be a common language of the country. If every State were to make its own regional language the medium of instruction in the colleges, what is to happen to the country's unity? The country's unity has already been torn to pieces by the reorganization of States on linguistic basis. Over and above this, if we make the regional language the medium of instruction in colleges, then we will be burying the unity of the country many fathoms deep. That will be a very sad mistake to make. That is the position so far as education is concerned.

Sir, with regard to the Pay Commission's Report, I wish it had come up before the House in this session itself so that the Legislature could have considered it in proper time. I do not know why it is delayed. It is common knowledge that our officers and employees are suffering and that they are looking forward to us for relief. I am sure that the Pay Commission will give sufficient help in this direction. Another matter I am not able to understand is that while the value of the rupee has fallen so low, our officers such as Collectors, Deputy Collectors and Judges are paid the same salary which they were getting ten years ago. It is high time that their salaries were raised. I say this not because I want them to get big salaries but because I know that they must maintain their status. They must be above board On the one hand, we do not want our officers to resort to corruption. On the other side, we make them resort to corruption by neglecting to improve their salaries I believe that the time has come when we should see that their difficulties are removed. I have always been feeling that the salary that the Ministers are getting is also very low. We fixed it long long ago when things were very different when the cost of living was very different, and when the value of the rupee was very different. But today to expect a Minister to get much less than what an officer of the Government gets is a ridiculous state of affairs. I think the Ministers must be paid

very much more than what they are getting today. Three thousand rupees and nothing less should be the salary of the Ministers. After all, we are spending large sums of money in the administration of the State and in order to make the Ministers maintain their status, their dignity and particularly when they are travelling, to enable them to be independent, they must have a salary which will help them to live an independent life.

(Deputy Chairman in the Chair.)

With regard to the Medical Department, I wish to say a few words. An hon. Member who spoke before me said that a committee should be appointed to go into the working of the hospitals. I would like that a commission should be appointed to go into the working of the hospitals in the City and elsewhere. Though the Hon. the Minister for Health is not here now, I wish in this connection to say something about the Royapettah Hospital. That hospital is kept in the very same deplorable condition for years and years. In the South of Madras there is great need for a first class hospital. We do not have one and the Royapettah Hospital has been there in that same condition for a long time. I wish the Hon. Minister were here now. I am sure he is thinking about it. But he must implement the proposals for improving the hospital.

I shall not take more of your time, Sir. Thank you.

* SRIMATHI SARASWATHY PANDURANGAM: சபைத் துணைத் தலைவர் அவர்களே, 1960-61-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்றபொழுது, நமது நிதி அமைச்சர் அவர்களேயும், முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்களைச் சேர்ந்த மற்ற அமைச்சர்களையும் மிகவும் பாராட்டுகிறேன். முக்கியமாக, கடந்த ஆண்டில் காய்கறிகள் மீது விதிக்கப்பட்ட வரிகளை நீக்கவேண்டுமென்றும், அழுகும் பொருள்கள் மீது வரி கூடாது என்றும் பேசியவர்களில் நானும் ஒருவர். அன்று விதித்த வரியை நானும் எதிர்த்தேன். ஆனால், இன்று விற்பனை வரிகள் எல்லாம் எடுக்கப்பட்டிருப்பதனுல், மக்கள் எல்லோரும் சந்தோஷப்படுவதைப் பார்த்தால், நாம் மிகவும் மகிழ்ச்சியடைய வேண்டியிருக்கிறது. அதற்காக மக்கள் இந்த அரசாங்கத்திற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில், விவசாயத்தைப் பார்க்கின்றபொழுது, இன்றைக்குப் பொருள்களின் விலைவாசிகள் எல்லாம் மிகவும் உயர்ந்திருக்கின்றன. உற்பத்தி அதிகமாகியிருக்கிறது என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. ஆனால், சர்க்கரையை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு அதிகமான அளவில் நஞ்சை நிலங்களில் கரும்பைப் பயிரிடுகின்றார்கள். மூன்று போகங்கள் நன்றாக விளையக்கூடிய நிலங்களை எல்லாம் கரும்பு பயிரிடுவதற்காக ஒதுக்குகிறார்கள். இதன் காரணமாக நமக்கு வேண்டிய தானிய உற்பத்தியில் பற்றாக்குறை ஏற்படுகின்றது. மக்கள் நலனுக்காக உற்பத்தி செய்வது கிடையாது. ஆகவே உற்பத்திப் பெருக்கத்திற்காக நெல்லை விளைவிப்பது தடைபட்டிருக்கிறது. ஆனால் நாம்

24th March 1960] [Srimathi Saraswathy Pandurangam]

அவர்களுக்குக் கண்டிப்பாகச் சொல்லத்தான் வேண்டும். எத்தனை ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருந்தாலும் சரி, இரண்டு ஏக்கர் கரும்பு பயிரிட்டுவிட்டு, பாக்கி நிலங்களில் எல்லாம்—மூன்று போகம் விளைகின்ற நஞ்சை நிலங்களில் எல்லாம்—மக்களுக்கு உணவாக உபயோகப்படுகிற நெல்தான் பயிரிட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். "ஆனால் சர்க்கரை மக்களுக்கு வேண்டாமா? சர்க்கரை நெருக்கடி வேறு இருக்கிறதே" என்று சிலர் கேட்பார்கள். நம் நாட்டில் 12–10 p.m. பனை மரம், தென்னை மரம் எல்லாம் கோடிக்கணக்கில் நம் இராச்சியத்தில் இருக்கின்றன. மரம் ஏறுபவர்கள் இன்றைய தினம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் வேலை கொடுத்தது போலவும் இருக்கும். சர்க்கரைப் பஞ்சத்தை நீக்கியது போலவும் இருக்கும். பனஞ்சாறு, தென்னஞ்சாறு இவற்றினால் வெல்லமும், வெல்லச் சர்க்கரையும் பண்ணக்கூடிய ஏற்பாட்டைச் செய்யலாம் என்று சொல்லிக் கொள்கிறேன். வெள்ளைச் சர்க்கரையில் சத்து கிடையாது. நாம் தென்னை, பனை இவற்றிலிருந்து உற்பத்தி செய்யக்கூடிய சர்க்கரையில் சத்து உண்டு. "இது எங்கே கிடைக்கிறது" என்றால், கிராம உத்யோக பவனுக்குச் சென்று பார்த்தால், அதை அவர்கள் எவ்வளவு வெள்ளையாகச் சுத்தம் செய்து வைத் திருக்கிறார்கள் என்பது தெரியும். ஆகவே, இதை வாங்கி அருந்தலாம். ஆனால், இன்றையதினம் லட்சக்கணக்கான நம் இராச்சிய மக்கள் வாழவேண்டுமானால், அவர்களுக்கு உணவு அளிக்கவேண்டுமானால், நாம் நெல் பயிரிட்டுத்தான் தீர வேண்டும் என்று சொல்லப் பிரியப்படுகிறேன்.

இரண்டாவதாக, ஆரம்பக் கல்வி. மக்கள் இதற்காக மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏனென்றால் எல்லாக் குழந்தைகளுக்கும் பகல் உணவு தரப்படு கிறது, ஏராளமான கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்டிருக் கின்றன. நல்ல ஆசிரியர்களும் நிரம்பப் பயிற்சி பெறுகிறார்கள். இவை எல்லாம் வரவேற்கத் தகுந்த விஷயம். மிகவும் பாராட்டுகிறோம். ஆனால் பகல் உணவுக்காக நாம் செலவிடு வதைக் கணக்கு எடுக்கிறபோது, ஒரு பிள்ளைக்கு 10 நயா பைசா செலவழிக்கப்படுகிறது. பத்து நயா பைசாவுக்குச் சத்துள்ள ஆகாரம் குழந்தைக்குக் கொடுக்க முடியாது. ஆகையால், சற்றே அரசாங்கம் அதை உயர்த்தி 15 நயா பைசா அளவுக் காவது உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 5 நயா பைசா பொதுமக்களிடமிருந்து வசூலித்துக் கொள்ளலாம்.

அடுத்தபடியாக, குழந்தைகளின் பராமரிப்பு. குழந்தை களின் பராமரிப்பு சாலைகள் நடத்தப்படுகின்றன. பத்து வயதிற்குள் இருக்கும் அநாதைக் குழந்தைகளின் பராமரிப்புக் காக 20 ரூபாயிலிருந்து 30 ரூபாய் வரையில் மானியமாக, சர்க்கார் மானியமாக அளிக்கப்படுகிறது. ஆனால், அநாதைப் பெண்கள், அநாதை மாதர்கள் இவர்களைப் பாதுகாக்கும்

[Srimathi Saraswathy Pandurangam] [24th March 1960

நிலையங்களுக்குப் பெண் ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் மானியம் கொடுக்கப்படுகிறது. அதுவும் பத்து வயதிற்கு உட்பட்ட அநாதைக் குழந்தைகளின் பராமரிப்புக்காகக் குழந்தை ஒன்றுக்கு இருபது ரூபாயிலிருந்து முப்பது ரூபாய் வரையில் மானியம் அளிக்கிறபோது, இங்கே பத்து வயதிற்கு மேற்பட்டு பதினெட்டு வயதிற்கு உட்பட்ட பெண்கள், மாதர்கள் இவர்களுக்குப் பத்து ரூபாய் என்று கொடுப்பது எந்த விதத்திலும் சரி என்று கருதமுடியாது. இவர்களுக்கும் சராசரி 25 ரூபாய் வழங்க வேண்டும் என்று அரசாங்கத்தைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். ஏற்றத்தாழ்வு இங்கே இருக்கக் கூடாது; உடையில் இருக்கக் கூடாது, உணவில் இருக்கக் கூடாது, பராமரிப்பில் இருக்கக் கூடாது. ஆகவே, இந்த அநாதைக் குழந்தைகள், மாதர்கள், பெண்கள் இவர்களுடைய பராமரிப்புக்காகச் சராசரி 25 ரூபாய் அளிக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது, வைத்திய வசதி. ஸ்ரீமதி மஞ்சுபாசினி அம்மையார் அவர்களும், சகோதரி ஸ்ரீமதி க்ளப்வாலா ஜாதவ் அவர்களும் வைத்தியச் சலுகைகளைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஆனால், நான் இணைப்பு வைத்தியக் கல்லூரியைப்பற்றி மட்டும் இரண்டொரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆண்டில் இருந்த நிலைமையை மாற்றி, இந்த ஆண்டு 45 லட்சம் அதிகப்படியாக சர்க்கார் அதற்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். வேண்டிய கட்டிடங்கள், வாகன வசதிகள் செய்திருக்கிறார்கள். சமீபத்தில் மாணவர்களைச் சந்தித்துப் பார்த்தேன். எந்த வழியில் தாங்கள் அரசாங்கத்திற்கு நன்றி செலுத்துவது என்று தெரியாமல் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அதே சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக மாணவர்கள் அங்கே 5-1/2 ஆண்டு படிக்கிறார்கள். மெடிகல் காலேஜில் படிக்கிறவர்களும் அதே 5-1/2 ஆண்டு படிக்கிறார்கள். ஆனால் பயிற்சி பெற்ற பிற்பாடு மெடிகல் காலேஜில் படிக்கிறவர்கள் டிகிரி பெறுகிறார்கள் என்றால், இந்த இணைப்பு வைத்தியக் கல்லூரியில் படிக்கிறவர்கள் டிப்ளமாதான் பெறுகிறார்கள் என்கிறபோது, அவர்கள் மனம் சற்று வருந்தத்தான் செய்கிறது. நம்முடைய ராஜம் பாரதி அம்மையார் தன்னுடைய இரண்டு பெண் குழந்தைகளில் ஒரு குழந்தையை மெடிகல் காலேஜில் படிக்க வைத்திருக்கிறார்கள். இன்னொரு குழந்தையை இணைப்பு வைத்தியக் கல்லூரியில் படிக்க வைத்திருக்கிறார்கள். "என்னுடைய இந்த மக்கள் இரண்டு பேர்களிலும் இணைப்பு வைத்தியக் கல்லூரியில் படிக்கிறவள் தான் அதிகத் தேர்ச்சி பெற்றிருக்கிறாள்" என்று சொன்னார்கள். "இருந்தாலும் என்ன பலன்? முடிவில் டிப்ளமாதான் வரப் போகிறது" என்று மிகவும் வருத்தப்பட்டார்கள். இப்படி எத்தனையோ பேர்களுடைய குழந்தைகள் இரண்டிடத்திலும் படிக்கிறார்கள். இந்தக் கல்லூரியைக் கலைத்துவிட்டாலும்

24th March 1960] [Srimathi Saraswathy Pandurangam]

கூட, கவலை இல்லை. வைத்துக்கொண்டு இங்கும் 5-1/2 ஆண்டு பயிற்சி கொடுத்து முடிவில் டிப்ளமா அளிப்பது என்பது சரி யல்ல. இவர்களுக்கும் டிகிரி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவர்களையும் மெடிகல் காலேஜில் எந்தத் துறையில் பயிற்சி பெற்றிருக்கிறார்களோ அந்தத் துறையில் ஹவுஸ் சர்ஜனுக இருக்கவேண்டிய ஒரு வருடத்தில் பயிற்சி அளித்து டிப்ளமாவுக்குப் பதிலாக எம்.பி.பி.எஸ். டிகிரி கொடுப்பது போல இவர்களுக்கும் டிகிரி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமது அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், இவர்கள் டிகிரி கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள் என்று நன்கு தெரியும். ஆனல், டிகிரி கொடுக்க மறுக்கும் ஸ்தாபனம், யுனிவர்சிடி, இதற்குச் சம்மதிக்காமல், டிகிரி கொடுக்க மறுக்கிறார்களோ என்கிற ஐயம் இருக்கிறது. ஒரு காலத்தில் அப்படி இருந்திருக் கலாம். ஆனல், மக்களுடைய எண்ணம், மக்களுடைய வாழ்வு, மக்களுடைய லட்சியம் எப்படி எப்படி மாறிவருகிறதோ, அதற்குத் தகுந்த முறையில் அவர்களும் வளைந்து கொடுத்துத் தான் ஆகவேண்டும் என்று சொல்லப் பிரியப்படுகிறேன். நம் மக்களுடைய எண்ணம் கல்லூரியில் தமிழ் போதன மொழியாக வேண்டும் என்று இருந்தது. அவர்கள் அதை ஆரம்பத்தில் ஏற்காவிட்டாலும், தமிழ் வளர்ச்சியில் மக்களுக்குள்ள ஆர்வத்தை உணர்ந்து வளைந்து கொடுத் திருப்பது மிகமிக வரவேற்கத் தகுந்தது. அதை நான் வரவேற் கிறேன். அதே போல, இங்கும் $5\frac{1}{2}$ ஆண்டு இணைப்புக் கல்லூரி யில் படித்து வெளி வருகிறவர்களுக்கு டிகிரி வழங்குவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களும் ஆலோசித்து அதற்குத் தகுந்த வழிமுறைகளைச் செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். தாய் தந்தையர்கள், வீட்டை வைத்து நிலத்தை வைத்து, சொத்தை வைத்து பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள். எல்லாச் சொத்தையும் இழந்தாலும் பரவா யில்லை. பிள்ளைகள் எந்த விதத்திலும் முன்னேறினல் போதும் என்று நினைக்கிறார்கள். அப்படி இந்தக் கல்லூரியிலே 5-1/2 ஆண்டுகாலம் படித்து வெளிவரக்கூடியவர்களுக்கு ஒரு சாராருக்கு 150 ரூபாய் இன்னெரு சாராருக்கு 250 ரூபாய் என்கிற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் சமம் என்கிற முறையில் இவர்களுக்கும் டிகிரி வழங்கவேண்டும் எனத் தாழ்மை யுடன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி நினைக்கும் போது, காந்திஜியைத்தான் நினைக்க வேண்டியிருக்கிறது. மக்கள் பெருக்கத்தை எப்படிக் குறைக்கலாம், எந்த முறையில் அதைக் கட்டுப்படுத்தலாமென்று காந்திஜி மிகவும் அழகாக எழுதி வைத்திருக்கும் புத்தகங்கள் பல இருக்கின்றன. நமது அரசாங் கம் இன்று நல்ல முறையில் குடும்பக் கட்டுப்பாடு செய்வதற் காகப் பல வைத்தியசாலைகள் மூலம் ரண சிகிச்சை செய்து வருகிறார்கள். இந்த நான்கு ஆண்டுகளில் ரண சிகிச்சை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை சுமார் 50,000. ஆனல், 20 ரண 12–20 p.m.

சிகிச்சைக்குச் செலவான பணம் ரூ. 20,000. அப்படி ஒருவர் ரண சிகிச்சை செய்துகொள்வதற்கு ரூபாய் ஆயிரம் செலவாகிறது. இதை நான் சொல்லவில்லை, சென்னைக் குடும்பக் கட்டுப்பாட்டுக் கமிட்டியில் உள்ளவர்கள் இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிறார்கள். மத்திய குழுவிலிருந்து ஒரு செய்தி வந்திருக்கிறது. காந்திஜி அவர்கள் காட்டிய வழியில் சென்றால் நல்லது என்பதற்கு ஒரு புத்தகம் தயாரித்து மத்திய குழுவிற்கு அனுப்புவதற்கு நாங்கள் ஒரு புத்தகத்தை வெளியிட்டிருக்கிறோம். ஆயிரம் ரூபாய் ஒருவரது ரண சிகிச்சைக்குச் செலவழிப்பது என்றால், இந்தத் திட்டத்தில் நாம் வெற்றி காணமுடியுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நகரப்புறங்களில் வேண்டுமானால், சென்னை நகராண்மைக் கழகத்தாரால் குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு வேண்டுமானால் செல்லலாம். ஆனால், கிராமங்களிலோ, பெண்களும் சரி, ஆண்களும் சரி இதுபற்றி வாயைத் திறந்தே ஒன்றும் சொல்லமாட்டேன் என்கிறார்கள். ஏழு லட்சம் கிராமங்களில் இதை எப்படிப் பிரசாரம் செய்வது? காந்திஜி சொன்ன வழியில் கிராம மக்களிடையே குடும்பக் கட்டுப்பாடுபற்றிப் பிரசாரம் செய்யவேண்டும். ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை என்ற தத்துவங்களை வைத்துக்கொண்டுதான், இயற்கையை இயற்கையால் வெல்ல முடியுமே தவிர, செயற்கையால் வெல்ல முடியாது. ரண சிகிச்சை முறையை நான் எதிர்க்கவில்லை. அதை ஆதரிக்கிறேன். ஒரு புறத்திலே அது இருக்கட்டும். இன்னொரு புறத்தில் காந்திஜி காட்டிய வழியைக் கடைப்பிடியுங்கள். காந்திஜி காட்டிய வழியில் நாம் செல்வோமானால், அதில் நாம் கண்டிப்பாக வெற்றி காண முடியும் என்ற நம்பிக்கையில்தான் இந்தப் புத்தகத்தை நாங்கள், கன்னியா குருகுலம், வெளியிட்டிருக்கிறோம். மத்திய குழுவிற்கு இதுபற்றி எழுதியிருக்கிறோம். இதுபற்றி நான் கூடுதல் ஒன்றும் பேசவில்லை, நேரம் அதிகமாக இல்லாததால், இந்தப் புத்தகம் இருக்கிறது அதைப் படித்துக் கொள்ளுங்கள்.

இன்று கல்வி நிலையங்களில் ஆண்களும் பெண்களும் கூட்டுச் சேர்ந்து படிக்கக்கூடாது என்று இங்கு சொல்லப்பட்டது. சினிமாக்களும் சுவரொட்டிகளும் மிகுந்த இந்தக் காலத்தில் கூட்டு முறையில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து கல்வி பெறுவது என்பது கஷ்டம்தான். ஆதி காலத்தில் 12 வயதுக்கு மேற்பட்ட பெண்களை எல்லாம் கன்னிமாடங்கள் கட்டி அங்கு வைத்துக் கலை ஒழுக்கம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆண்களையும் பெண்களையும் தனியாக வைத்துக் குருகுலங்கள் அமைத்துக் கல்வி போதித்து வந்தார்கள். 12 வயது முதல் 20 வயது வரையில் ஒதுக்கி வைத்து வந்தார்கள், பெண்களை. ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கும்போது, அதில் ஒரு பகுதியை இந்த மாதிரிக் குருகுலங்கள் அமைப்பதற்கு ஏன் பயன்படுத்தக் கூடாது என்று கேட்கிறேன். 20 வயதிற்குள் பெண்களுக்குத் திருமணம்

24th March 1960] [Srimathi Saraswathy Pandurangam]

செய்யக் கூடாது என்று சட்டம் இயற்றினுல், வீரியம் மிகுந்த காலத்தில் அவர்கள் குழந்தைகள் பெறுவதைக் குறைக்க முடியும். எனக்கு அதிக நேரம் இல்லாததன் காரணமாக இந்தப் புத்தகம் இருக்கிறது, அதைப் படித்தால் தெரியும் என்று சொல்லிக் கொண்டு எனக்கு இந்த வாய்ப்பைத் தந்த தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI K. M. RAMASAMY GOUNDER : Mr. Deputy Chairman, Sir, I confine my observations only to a very few items, since I am afraid, the time at my disposal is very limited. About the vital question of change-over to Tamil medium, I am indeed sorry that much heat has been introduced. That Tamil should be the medium of instruction in colleges also has been the settled policy of this Government, ever since the dawn of Independence, if not from earlier times. This policy is going to be implemented taking all the precautions and making all the preparations necessary. But on the eve of its introduction, the press and the public platform have been freely used for crying a halt to this very necessary reform. Many of us feel and are afraid that such vehement opposition may lead to some delay in the implementation of this policy. The Tamil Language Research and Development Council has taken immense pains for introducing a pilot scheme in Coimbatore Arts College from the year 1960–61. I have had occasions to talk to my hon. Friend Sri G. R. Damodaran and some other members of the council and all of them are very hopeful about the scheme. More than a decade has been spent, if not wasted, in taking this important decision. I do not think we can go on talking. Even while introducing the Budget, the Hon. the Minister for Finance has been very explicit and cautious when he says that "in respect of scientific and technical education, English will continue to be the medium of instruction for some more time and that changes "this direction should be introduced only on an all-India basis" I do not think any further guarantee or assurance is required for those who think that this is a reform that should be delayed or one in which there should be a more go-slow policy. Is any useful purpose going to be served by delaying this reform? Teaching is an art and it can be compared to the art of swimming where the learner and the teacher have to get first into the water to learn it. 12–30 p.m. Any amount of theorizing, any amount of teaching remaining on the land will take the people concerned nowhere. Only by introducing the Tamil medium, we can give an impetus and create an atmosphere to bring out new text-books and new reference books and the language will be enriched only when there is demand for books. So, I earnestly appeal to the Hon. Minister that the speed should be accelerated instead of its being slowed down, as we have to reach the goal earlier and can solve the problem once for all at an early date.

This takes us next to the problem of devising ways and means for improving the teaching of English in our schools. Here, it is stated that English will be taught from the fifth standard onwards

from the next school year. Further, a scheme with the assistance of the British Council for re-training teachers in the teaching of English has already been introduced. It is a very ambitious scheme and it states that within a period of two years, all secondary grade teachers will be re-trained under this scheme. I feel it is so very ambitious that in our anxiety to re-train all, we may not try to separate the sheep from goats. English teaching cannot be done by all. It requires special handling. Only those who have the taste for it, who have the innate ability for it can do it. And in the scheme of things to come, it is high time that we contemplate creating the special post of English Pandits in our schools, as is obtaining in other countries of the world. As for it, we have special posts of teachers of other languages and not one's own, like French teachers in the schools in England or German teachers in the schools in France or French teachers in the schools in Germany or, for that matter, Hindi teachers in non-Hindi regions of our country. If there is to be proper development, if we have to see far far ahead and hatch schemes not ony for the immediate future but for generations to come, instead of allowing one and all to handle English, it will be worth while to pick and choose from among the lot and give them the special training required and make them the masters of English.

After all is said and done, I am afraid, I should say a few words about the miserable lot of the teaching community. Several of the speakers who have preceded me have dwelt at length and made out a very strong case for enhancement of the salary scales, old age provisions and the like. Now I am going to deal only with one aspect, namely, the service conditions of teachers employed in aided schools where everything is not well and a sense of insecurity has been all along there. But in answering a question in the other House a week ago, the Hon. the Minister for Education is reported to have said that "the existing provisions for ensuring security of service and protection against victimization of teachers employed in aided schools are adequate and the Government do not propose to take any further steps in this regard,". If that be the case, the necessity should not have arisen the other day, for my hon. Friend Sri G. Krishnamoorthy moving a motion calling attention to a matter of urgent public importance and the Hon. Minister making a statement thereon as regards the termination of the services of eight teachers including the Headmaster of a High School in Madurai. So, instead of feeling complacent about this, we should see that teachers everywhere, whether they are in a Government school or in a municipal school or in a local board school, have the same service conditions. It is easy to say wherever the management fails to comply with the orders of the department, the grant will be withheld or the recognition will be withdrawn. It is very rarely done or not done at all. At any rate, that is only a cure after the ryot has set in but what I want is the prtvention of the private managements from doing it. The Hon. Minister himself in his statement referred to above was not able to give a categirical assurance that those teachers will be reinstated

even if the appeal is decided in their favour. Till the time the appeal is disposed, perhaps it may be months, if not years, the teachers concerned are being put to untold miseries. In their case, it becomes really justice denied and not merely justice delayed. And whenever we talk of education, we speak of it as a national concern. We say that teachers are engaged in doing a great national service, perhaps the greatest. And is there any point in stating that our institutions are national and that our teachers are servants of the nation when they are to be subjected to the whims and fancies of individuals or individual bodies without adequate safeguards and service conditions? The Prosecutor as well as the Judge happens to be the same person or the same body and the poor teachers are always at the mercy of these people. If you feel that the Education of our children should be in the hands of honest and freedom-loving men and women and want the teachers to do justice to their work and do their duty by the nation, they should free from the fear of victimisation or harassment and should have the same security of service, as is obtaining in Government and quasi-Government institutions.

* Sri K. V. RAMASWAMY: அவைத் தலைவர் அவர்களே, 12–40 p.m.
இன்றைய தினம் 1960–61-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சர்க்கார் கொண்டுவந்ததை நான் மனமுவந்து பாராட்டுகிறேன். ஏன் பாராட்டுகிறேன் என்பதை விளக்கிக் கூற ஆசைப்படுகிறேன். நம்முடைய நாட்டைப் பல காலமாகப் பல அரசர்கள் ஆண்டுவந்தார்கள். அந்தக் காலத்தில் இருந்த அரசர்கள் ஒருவரும் மக்களுக்கு வேண்டிய இவ்வளவு காரியங்களைச் செய்யவில்லை என்று சரித்திரம் கூறுகிறது. சூரியனே அஸ்தமிக்காது, சூரியன் எந்த திசையில் அஸ்தமித்தாலும் எங்கள் ஆட்சி இருந்துகொண்டிருக்கும் என்று சொல்லிக் கொண்டிருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருந்த காலத்தில் கூடச் செய்ய முடியாத பல நன்மைகளை இன்று மக்களுக்கு நம்முடைய அரசாங்கம் செய்து வருகிறது என்பதை நாம் எல்லோரும் அறிந்த பின்னால், ஏன் நாம் இந்த அரசாங்கத்தைப் பாராட்டக்கூடாது, அவ்விதம் பாராட்டுவதில் என்ன தவறு இருக்கிறது, அதில் என்ன தப்பு என்று கேட்க விரும்புகிறேன். அதாவது, இந்த நாட்டில் 36 கோடி மக்கள் என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கணக்கிட்டிருக்கிறது. மக்களுக்கு அப்போது அவர்கள் என்ன செய்தார்கள் என்று பார்த்தால், அவர்கள் ஒன்றுமே செய்யவில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. அவ்விதம் அவர்கள் ஏதாவது செய்திருந்தால், இன்று இந்த அரசாங்கத்திற்கு ஒன்றுமே செய்ய வேண்டியிருக்காது. ஆகவே, இப்போது இந்த அரசாங்கத்தால் செய்யப்பட்டிருக்கும் வேலைகள் எல்லாம் முன்னால் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசாங்கத்தால் செய்யப்படாத வேலைகள் என்பது நிரூபிக்கப்படுகிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலத்தில் செய்யப்படாத வேலைகளைத் தான் இப்போது நாம் செய்துகொண்டு வருகிறோம். அப்போது விடப்பட்ட காரியங்களையெல்லாம் இப்போது நாம் செய்துகொண்டு வருவது மட்டுமல்ல, மக்களுடைய குறைகளை

[Sri K. V. Ramaswamy] [24th March 1960

எல்லாம் கண்டறிந்து, அவைகளை எல்லாம் போக்குவதில் நமது அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. அந்த முறையில் இன்று நாம் சுதந்திரம் பெற்று இந்த 13 ஆண்டுகளில் நாம் என்னென்ன காரியங்களையெல்லாம் செய்திருக்கிறோம் என்பதை நான் சுருக்கமாகக் கூற ஆசைப்படுகிறேன்.

முதலில் மதுவிலக்கைக் கொண்டுவந்தோம். மதுவிலக்கினால் நமக்கு எவ்வளவோ கஷ்டங்கள் இருந்தும், சர்க்காருக்கு எவ்வளவோ கஷ்டங்கள் இருந்தும் கூட, தைரியமாக மக்களுடைய நன்மையைக் கருதி, மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை, உயர்த்துவதற்காக—மோசமான நிலைமையிலிருந்து பெண்களின் அவல நிலையைப் போக்குவதற்காக—மதுவை அருந்துபவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன், உடனே மது விலக்கைக் கொண்டுவந்தோம். இதில் பலவிதமான கஷ்டங்கள் இருந்தாலும் கூட, குறைகள் இருந்தாலும் கூட, நாம் மதுவிலக்கை நடத்திக்கொண்டிருக்கிறோம். கடினமான சட்டங்களையும் போட்டுத்தான் இதை அமுல் நடத்திக்கொண்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, அரிஜன சேவையைப் பொறுத்த வரையில், எல்லோருக்கும் இந்த அரசாங்கம் செய்து வருகிற காரியங்களைப் பற்றித் தெரியும். ஏகாதிபத்திய காலத்தில் எப்படி இருந்தார்கள், அப்போது எல்லாம் இந்தச் சேரிகள் இல்லாமல் இருந்ததா ? அப்போது இவர்கள் நிலை எப்படியிருந்தது ? அப்போது இந்தச் சேரிகள் எல்லாம் இவர்கள் கண்களில் படவில்லையா ? அப்போது இதைப்பற்றி யாரும் குறை கூறவில்லை. அப்போது அவர்களைப் பற்றிக்கொண்டிருந்தவர்கள், அப்போது அவர்களுக்கு வணக்கம் செய்து கொண்டிருந்தவர்கள், அப்போது இதைப்பற்றி ஒன்றும் அன்று ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த பிரிட்டிஷ்காரர்களிடம் சொல்லவில்லை. ஆனால், இப்போது அதையெல்லாம் செய்துகொண்டிருக்கும் அரசாங்கத்தைக் குறை கூறுகிறார்கள். இப்போது அவர்களுக்குச் செய்து கொடுத்திருக்கும் வசதிகளையெல்லாம் பார்த்தால், அரிஜனங்கள் இருக்கிற இடங்களில் எல்லாம் குடி தண்ணீர் வசதி என்ன, அவர்களுக்கு வீடு கட்டுவதற்குள்ள வாய்ப்புகள் என்ன, அவர்களுக்குக் கல்வி வசதிகள், சலுகைகள் இவைகள் என்ன, உத்தியோகச் சலுகைகள் என்ன இவைகள் எல்லாம் எவ்வளவு தூரம் உயர்ந்திருக்கின்றன என்று சொல்ல வேண்டியதில்லை. இவைகள் எல்லாம் இந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் நன்கு தெரியும். இவைகளை நான் மட்டும் கூறவில்லை, நாட்டிலுள்ள மக்கள் எல்லாம் கூறுகிறார்கள். நான் கூறினால் காங்கிரஸ்காரரே காங்கிரஸ் அரசாங்கத்தைப் போற்றிப் பேசுகிறார் என்று சொல்லுவார்கள். அது அல்ல என்னுடைய நோக்கம். அரசாங்கம் குற்றம் செய்திருந்தாலும் அந்தக் குற்றத்தைக் கூசாமல் எடுத்துச் சொல்லுபவன் நான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முறைகளில் எல்லாம் அரிஜன சேவை செய்யப்பட்டு வருகின்றது. அதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

24th March 1960] [Sri K. V. Ramaswamy]

அடுத்தபடியாக, குடி தண்ணீர்த் திட்டம், எந்தக் கிராமத்தைப் பார்த்தாலும், அங்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் டவுனில் இருப்பது போல் டாங்குகள் அமைத்துக் கொடுத்து வசதி செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் பல கிராமங்களில் இவ்விதம் வசதி செய்து கொடுக்கவேண்டியிருக்கிறது. அங்கெல்லாம் எல்லா வசதிகளும் செய்யப்படும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. ஒவ்வொன்ருகத்தான் செய்ய முடியும். அவ்விதம் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆவல். எல்லா வேலைகளையும் முடித்தாலும்கூட, சில இடங்களில் அதற்கு வேண்டிய வசதி இருப்பதில்லை. சில சந்தர்ப்பங்களில் குடி தண்ணீர் வசதி செய்துகொடுக்கும் விஷயத்தில் போதிய சாமான்கள் கிடைப்பதில்லை. போதிய பம்புகள் கிடைப்ப 12-50 p.m. தில்லை, போதிய பைப்புகள் கிடைப்பதில்லை. இவைகளை எல்லாம் ஏககாலத்தில் செய்துவிட முடியாது. இருந்தாலும் எவ்வளவோ துரிதமாகச் செய்து கொண்டிருக்கிருர்கள் நமது அரசாங்கத்தார். இப்போது நமக்கு என்னென்ன கருவிகள் எல்லாம் வேண்டுமோ அவைகளையெல்லாம் இந்த நாட்டிலேயே செய்வதற்கு வேண்டிய முயற்சி செய்து கொண்டிருக்கிருர்கள். நாம் ஒரு வீடு கட்டி முடிந்தால் கூட, சில சமயங்களில் சில குறிப்பிட்ட சாமான்கள் கிடைக்காததன் காரணமாக, வேலை முற்றுப் பெருமல் இருந்து விடுகிறது. ஆகவே, இவைகளையெல்லாம் எதிர்க் கட்சி மெம்பர்கள் உணர வேண்டும்.

அடுத்தபடியாக, அணைக்கட்டுகள் கட்டியிருப்பதைப் பார்த்தால், எங்கு எல்லாம் நீர்ப்பாசன வசதிகள் செய்துகொடுக்க முடியுமோ, அங்கெல்லாம் இந்த 13 வருட காலத்தில் பல பெரிய அணைக்கட்டுகளையும் பல சிறிய அணைக்கட்டுகளையும் கட்டியிருக்கிருர்கள். இதைப்பற்றி எதிர்க் கட்சி மெம்பர்கள் சற்று சிந்திக்க வேண்டும். இவற்றையெல்லாம் சற்று சிந்தித்துப் பார்த்தால், இப்போது காங்கிரஸ் கட்சியைக் குறை கூறிக் கொண்டிருப்பவர்கள் தலைகுனியத்தான் வேண்டுமே தவிர, வேறு வழியில்லை. இப்போது நடைபெறுகின்ற காரியங்களைப் பார்த்தால், எவ்வளவோ துரிதமாக ஆங்கில ஆட்சியில் எல்லாம் நடைபெருத விதத்தில், எந்தெந்த இடத்தில் அணைகள் கட்ட முடியுமோ அந்த இடங்களில் எல்லாம் அணைகளைக் கட்டு கட்டென்று கட்டி, தட்டு தட்டென்று தட்டியாய் விட்டது. இப்போது அரசாங்கம் செயல்பட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்தால், ஆமை வேகத்தில் போய்க்கொண்டிருக்கிறது என்று சொல்ல முடியாது, மின் வேகத்தில் போய்க்கொண்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். அதல்லாமல், இந்த அரசாங்கம் ஆமை வேகத்தில் போய்க்கொண்டிருக்கிறது என்று சொல்லுபவர்கள்தான் ஆமை வேகத்தில் போய்க்கொண்டிருக்கிருர்கள் என்று சொல்லவேண்டியிருக்கிறது. அரசாங்கம் செய்து கொண்டிருக்கிற வேலைகளையெல்லாம் பார்த்தால், அரசாங்கம் நிச்சயமாக மின் வேகத்தில்தான் போய்க்கொண்டிருக்கிறது என்று தைரியமாகச் சொல்ல முடியும். மேலும் அரசாங்கம் செய்யக்கூடிய வேலைகளெல்லாம் பூர்த்தி

யாகி, ஒவ்வொரு இடத்திலும் பச்சைப் பசேல் என்று தெரிந்த பின்னுல்தான், காங்கிரஸ் சர்க்காரின் சேவையெல்லாம் என்ன என்று மக்கள் உணர்ந்துகொள்வார்கள். நாம் செய்து கொண்டிருக்கிற வேலேகள் எல்லாம் பூரா முடியவேண்டுமென்ருல், பல தடங்கல்களும் ஏற்படுகின்றன. எல்லா இதர வேலேகளும் முடிந்திருக்கும், ஒரு சிறு சாமான் இல்லே என்ற காரணத்திற்காக வேலே முடிக்காமல் நிறுத்தப்பட்டிருக்கும். நாம் ஒரு நல்ல பெரிய வீட்டைக் கட்டி எல்லா வேலேகளேயும் முடித்துவிட்ட பின்னுலும், ஒரு fan போடுவதற்கு வேண்டிய ஒரு சிறு ஸ்பிரிங் தேவையாய் இருக்கும். அது கிடைக்காத காரணத்தால் வேலே முடிந்திருக்காது. இதைப் பார்த்துக்கொண்டு, இவ்வளவு பெரிய வீட்டைக் கட்டிவிட்டு, ஒரு fan போடாமல் விட்டு விட்டார்களே என்று பார்க்கிறவர்கள் சொல்லிக்கொண்டிருப்பார்கள். இந்த மாதிரியான நிலேமையில் இன்றைக்கு நாம் எவ்வளவோ கஷ்டப்பட்டு எவ்வளவோ காரியங்களேச் சாதித்துக்கொண்டிருக்கிறேம். பல சாமான்கள் அன்னிய நாட்டிலிருந்து வரவேண்டியதாக இருந்தும், அவைகளே வரவழைத்துப் பல காரியங்களேச் செய்திருக்கிறேம். நம் சர்க்காரின் திறமையைப்பற்றி என்ன சொல்லுவது என்று எனக்குப் புரியவில்லே. அப்பேர்ப்பட்ட சர்க்காரை வாய் கூசாமல் குறை கூறுவது என்ருல், அது மிகவும் ஈனத்தனமான காரியம் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

THE HON. SRI R. VENKATARAMAN: இந்த ஹவுசில் உள்ளவர்கள் அப்படிச் சொல்லவில்லேயே.

* SRI K. V. RAMASWAMY: இந்த ஹவுசில் உள்ளவர்கள் எல்லாம் பெரிய மனிதர்கள். இவர்கள் சொல்லமாட்டார்கள். சொன்னுர்கள் என்று சொல்லவில்லே. வெளியில் கிராமங்களில் நடக்கிற விஷயத்தைப்பற்றி நான் சொன்னேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: தப்பாக நினேத்துக் கோபப்படப்போகிருர்களே என்று சொன்னேன்.

SRI K. V. RAMASWAMY: நான் பேசுவதைக் கேட்டு இந்த ஹவுசில் உள்ளவர்கள் கோபப்படமாட்டார்கள். குழந்தை, சின்னப்பையன் ஏதோ பேசுகிருன் என்று நினேத்துக் கோபப்படமாட்டார்கள் என்று தெரிந்துதான் பேசுகிறேன். அப்படியே கோபித்தாலும், பெரியவர்கள் கோபம் நன்மைக்குத்தான் என்று நான் உணர்ந்திருப்பதனுல், தைரியமாகப் பேசுகின்றேன்.

அடுத்தபடியாக, குளம், குட்டைகள், இவைகளேயெல்லாம் எவ்வளவு மராமத்துச் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து விட்டார்கள். எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் நியாயமான முறையில் இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும் என்று சொன்னுல், அவைகளேயும் செய்துவருகிருர்கள், அவர்கள் சொல்வதைக் கேட்டு அன்பு காட்டி நல்ல முறையில் நமது அமைச்சர்கள் எல்லாம் அவைகளேக் கவனித்துச் செய்து வருவதில் வியப்பில்லே. நல்ல நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன.

24th March 1960] [Sri K. V. Ramaswamy]

இன்னும், மருத்துவ வசதியை எடுத்துக்கொண்டால், முன்பு எங்கள் பகுதியில் கோயம்புத்தூரில்தான் ஆஸ்பத்திரி இருக்கும். நோயாளிகள், பெண்டு பிள்ளைகள் எல்லாம் பத்துப் பதினைந்து மைல் கடந்து அங்கேதான் போகவேண்டியிருக்கும். அதுவும் பிரசவம் என்றால், யாரும் போகமாட்டார்கள். " ஆஸ்பத்திரிக்குப் போய் பிள்ளை பெறுவதா? " என்று நம் பெண்கள் அங்கே போகவே வெட்கப்படுவார்கள். ஆனால், இப்போது எங்கே பார்த்தாலும், ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நம் பெண்கள் கர்ப்பம் ஆவதற்கு முந்தியே ஆஸ்பத்திரிக்குச் சென்று பரீட்சை பண்ணிக்கொள்கிறார்கள். குழந்தை ஆரோக்கியமாக இருக்குமா, உயிரோடு பிறக்குமா என்பதாகவெல்லாம் முன்பே ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சோதனை செய்து கொள்கிறார்கள். இந்த அளவுக்கு மருத்துவத் துறையில் சர்க்கார் பல முன்னேற்றங்களைச் செய்திருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக வேண்டுமானால், இன்னும் அதிக ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்த வேண்டும் என்று கிராமத்தில் சொல்லிக்கொள்கிறார்களே தவிர, ஐந்து மைல், பத்து மைல் சுற்றளவுக்குள் ஆஸ்பத்திரிகள் வைத்து வருவதைப்பற்றி அவர்கள் மிகவும் சந்தோஷப்படுகிறார்கள்.

அடுத்தபடியாக, தொழிலாளர்கள் விஷயம். தொழிலாளர்களை முன்பு பார்த்திருக்க வேண்டும். காலை நான்கு மணி, ஐந்து மணிக்குப் போனால், இரவு எட்டு மணி, பத்து மணிக்குத்தான் திரும்புவார்கள். அப்பன் யார் என்று கூடக் குழந்தைகளுக்குத் தெரியாது. அவ்வளவு இருட்டில்—குழந்தை எழுந்துவிடுவதற்கு முன்பே போய்—இரவு நன்றாக இருட்டிய பிறகு—குழந்தை தூங்கிப்போன பிற்பாடுதான் வரக்கூடிய நிலை இருந்தது. ஆனால், இன்றையதினம் அவர்களுடைய நிலைமை அப்படி இல்லை. குறிப்பிட்ட நேரம், குறிப்பிட்ட கால வேலை, சம்பளம், போனஸ், விடுமுறை வசதிகள் எல்லாம் நல்ல முறையில் அமைத்துக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் அந்தத் தொழிலாளர்களே நன்கு உணர்ந்திருப்பார்கள். அப்புறம் வேண்டுமானால் சொல்லட்டும், " இந்த சர்க்கார் மோசம் " என்று. என்றாலும், இவ்வளவு நன்மையைத் தொழிலாளர்களுக்குச் செய்து கொடுத்திருக்கிற இந்த சர்க்காரை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

அடுத்தபடியாக, கைத்தறித் தொழில். கைத்தறிக்காரர்களுக்குச் சலுகை கொடுக்க நம் சர்க்கார் எவ்வளவோ செய்து வருகிறது. கதர் உடுத்து, கைத்தறி ஆடைகளை உடுத்து, கைத்தறித் துணிகளுக்கு ரிபேட் கொடுத்து, கைத்தறியை ஆதரியுங்கள் என்று நம் சர்க்கார் சொல்கிறது. மில் துணியைக் கட்டிக்கொண்டு கைத்தறியாளர்களை ஆதரிக்கவில்லையே என்று மற்றவர்களைப் போலக் கூச்சல் போடவில்லை. கைத்தறியாளர்களுடைய நலனில் அதிக அக்கறை கொண்டு இந்த சர்க்கார் வகுத்திருக்கிற பட்ஜெட்டை என்னால் போற்றாமல் இருக்க முடியவில்லை.

[Sri K. V. Ramaswamy] [24th March 1960

தொழிற்சாலைகள், தொழிற்சாலைகள் என்றால், சென்னை கோச் பாக்டரி என்ன, இன்னும் கோயம்புத்தூரில் ஆரம்பிக்கப் பட்டிருக்கிற தொழிற்சாலைகள் எல்லாவற்றையும் பார்த்தால், நம் சர்க்காரைப் போற்றாமல் இருக்க முடியாது. எத்தனையோ தொழிற்சாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதே போல, பஞ்சாலைகள். அதிகமான பேர்களுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறார்கள்.

கடன் உதவி அளிப்பது என்றால், கிணறு வெட்ட, வீடு கட்ட, சிறு தொழில்களை நடத்த, இன்னும் விவசாயத்திற்கு வேண்டிய கருவி கரணங்களைச் சேகரித்துக்கொள்ள என்று பல இனங்களில் உதவி செய்துவருகிறார்கள். பாதி விலைக்கு உர விநியோகம் மற்ற விவசாயக் கருவிகளின் விநியோகம் எல்லாம் செய்கிறார் கள். இவையெல்லாம் எப்படி விவசாயிகளிடத்தில் போய்ச் சேருகிறது, சேருகிறதா இல்லையா என்பதைப்பற்றிப் பிறகு பேசுகிறேன். இப்போது சர்க்கார் இன்ன இன்ன காரியங்களை யெல்லாம் செய்துவருகிறார்கள் என்று சொல்லிப் பாராட்டு கிறேன்.

அடுத்தபடியாக, ரோடுகள். கொஞ்ச காலத்திற்கு முந்தி ரோடுகளில் மரம் மட்டையே கிடையாது. தப்பித் தவறி ஒதுங்குவதற்குக் கூட நிழல் இருக்காது. ஆனால், இப்போது எங்கே பார்த்தாலும் ரோடு ஓரங்களில் மரங்கள் வளர்க்கப் பட்டுவருகின்றன.

DEPUTY CHAIRMAN: இன்னும் இரண்டு நிமிஷம் இருக்கிறது.

* SRI K. V. RAMASWAMY: இரண்டு நிமிஷம் போதாது. தயவு செய்து கொஞ்சம் அதிக நேரம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN: இப்போது இரண்டு நிமிஷம் பேசலாம். பிற்பகலில் கனம் அங்கத்தினர் தொடர்ந்து இன்னும் ஐந்து நிமிஷம் பேசலாம்.

* SRI K. V. RAMASWAMY: போக்குவரத்து விஷயங்களைப் பற்றி நான் சொன்னேன். அநேகமாக எல்லா இடங்களுக்கும் ரோடுகள் போடப்பட்டு ரோடுகளில் மரங்கள் வளர்க்கப் படுகின்றன. இவைகள் எல்லாம் ஒரே நாளில் மந்திரத்தினால் வந்துவிடாது. அதற்குப் பணம் செலவழித்து, ஆட்களைப் போட்டு, மரங்களை நட்டுப் பராமரிக்க வேண்டும். இப்படிப் பல நல்ல காரியங்களை இந்தக் காங்கிரஸ் சர்க்கார் செய்து வருகிறார்களே என்று எதிர்க் கட்சிக்காரர்கள் பொச்சரிப்பு கொண்டு குற்றம் சொல்லலாம். எத்தனை அக்கப்போர் பண்ணினாலும், இந்த சர்க்கார் அதிகமான நன்மைகளைச் செய்து வருகின்றது என்ற காரணத்தினால், நான் அதைப் பாராட்டு கிறேன். நீங்கள் சொன்ன இரண்டு நிமிஷம் ஆகிவிட்ட காரணத்தினால், என்னுடைய பேச்சைத் தொடர்ந்து நான் பிற்பகலில் பேசுகிறேன்.

24th March 1960]

DEPUTY CHAIRMAN : The House will now rise for lunch and meet again at 3 p.m.

The House then rose.

(After lunch—3 p.m.)

(Mr. Chairman in the Chair.)

II.—ANNOUNCEMENTS—*cont.*

(2) MESSAGE FROM THE GOVERNOR.

MR. CHAIRMAN : I have to announce to the House that I have received a message from the Governor of Madras recommending to the Madras Legislative Council the consideration of the Madras Appropriation Bill, 1960.

(3) MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have also to announce to the House that i have received a message, dated 24th March 1960 from the Hon. Speaker, Madras Legislative Assembly, transmitting a copy of the Madras Appropriation Bill, 1960 (L.A. Bill No. 4 of 1960), as passed by the Legislative Assembly on the 24th March 1960, and signed by him for the recommendations of the Council and certified that this is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

III. GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1960–61—*cont.*

MR. CHAIRMAN : The hon. Member Sri A. J. Arunachalam will now speak.

SRI A. J. ARUNACHALAM : தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி கடந்த ஐந்து தினங்களாக . . .

* SRI K. V. RAMASWAMY : பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார். நான் பேசவேண்டியது பாக்கியிருக்கிறது.

MR. CHAIRMAN : பேசுங்கள்.

* SRI K. V. RAMASWAMY : அவைத் தலைவர் அவர்களே, நான் காலையில் பேசியதைத் தொடர்ந்து இப்பொழுது பேச அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். அதற்காக நான் தங்களுக்குக் கடமைப்பட்டுள்ளேன். காலையில் பல விஷயங்களைக் குறித்துப் பேசினேன். மேலும், சில விஷயங்களைப்பற்றி இங்கே கூற முன் வந்துள்ளேன். போக்குவரத்து விஷயத்தைப்பற்றிக் காலையில் கடைசியாகப் பேசினேன்.

அடுத்தபடியாக, கல்விச் சலுகையைப்பற்றி சர்க்கார் என்ன செய்திருக்கிறார்கள் என்பதைப்பற்றியும் இங்குள்ள அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும். முன்பெல்லாம்